லாரி மீது கார் மோதல்: திருப்பதி சென்று வந்த 4 பேர் பரிதாப பலி

ஐதராபாத், ஜன. 7–

திருப்பதி ஏழுமலையானை தரிசித்து விட்டு இன்று அதிகாலை ஊர் திரும்பிய கார், நின்று கொண்டிருந்த லாரியில் மோதிய விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டம் மர்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து பேர் நேற்று முன்தினம் திருப்பதி சென்று சாமி கும்பிட்ட பின் காரில் ஊர் திரும்பி சென்று கொண்டிருந்தனர். இன்று அதிகாலை அவர்கள் சொந்த ஊரான மர்தூர் அருகே காரில் சென்று கொண்டிருந்த போது திடீரென எதிர்பாராத விதிமாக சாலையோரத்தில் நின்று கொண்டிருந்த லாரியின் பின்னால் கார் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் காரின் முன்பகுதி லாரியின் அடியில் சிக்கி நசுங்கியது. விபத்தில் காரில் பயணம் செய்த ஐந்து பேரில் நான்கு பேர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக மரணமடைந்தனர். தகவலறிந்த போலீசார் விரைந்து வந்து காரில் இறந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

படுகாயம் அடைந்த மற்றொரு நபர் மருத்துவமனையில் உள்ள தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து பற்றி பிரகாசம் மாவட்ட போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

★ மின்சாரத்தால் இயங்கும் ★ 1.5 கி.மீ. நீளம்
★ கூடுதலாக 25 டன் சரக்கு கையாள முடியும்

உலகின் முதல் இரட்டை அடுக்கு சரக்கு ரெயில்: மோடி பச்சை கொடி

புதுடெல்லி, ஜன. 7–

ஹரியானா – ராஜஸ்தான் மாநிலங்களுக்கு இடையே மேற்கு பிரத்யேக சரக்குப் பாதையின் ரெவாரி மதார் பிரிவை பிரதமர் மோடி இன்று (7ந் தேதி) நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

மின்சாரத்தால் இயங்கும் 1.5 கி.மீ நீள உலகின் முதல் இரட்டை அடுக்கு பெட்டக ரயில் போக்குவரத்தையும் பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

மேற்கு பிரத்யேக சரக்குப் பாதையின் 306 கி.மீ தூர ரெவாரி மதார் பிரிவு துவக்க விழா காணொலிக் காட்சி மூலம் நடந்தது. இந்நிகழ்ச்சியில், ராஜஸ்தான், ஹரியாணா மாநில ஆளுநர்கள், முதல்வர்கள், மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்கு ரயில்வேயின் பிரத்யேக சரக்கு ரெயில் பாதையில் ஹரியானா மற்றும் ராஜஸ்தானில் முறையே ரெவாரி மதார் பிரிவு அமைந்துள்ளது. (தோராயமாக ரெவாரி மாவட்டம் மகேந்திரகரில் இருந்து 79 கி.மீ) , (தோராயமாக ஜெய்ப்பூர், அஜ்மீர், சிகார், நாகாவூர், ஆள்வார் மாவட்டங்களில் இருந்து 227 கி.மீ). இதில் புதிதாக அமைக்கப்பட்ட ஒன்பது புதிய சரக்கு ரயில் நிலையங்கள் உள்ளன. இதில் புதிய தப்லா, புதிய பகேகா, புதிய ஈர்மாதோப்பூர், புதிய பச்சார் மாலிக்பூர், புதிய சகுன், புதிய கிஷன்கர் ஆகிய இடங்களில் கிராசிங்குகள் அமைந்துள்ளன. ரெவாரி, புதிய அட்டலி, புதிய புலேரா ஆகிய நிலையங்கள் சந்திப்புகளாகும்.

இந்தப் பிரிவு திறக்கப்படுவதன் மூலம், ராஜஸ்தான் மற்றும் ஹரியானாவின் ரெவாரி

மனேசர், நர்னாவுல், புலேரா, கிஷன்கர்க் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளுக்குப் பெரும் பயன் கிடைக்கும். கத்துவாசில் உள்ள கன்கார் சரக்குப் பெட்டக முனையத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வழி ஏற்பட்டுள்ளது. குஜராத்தின் காண்ட்லா, பிப்பாவாவ், முந்த்ரா, தாகெஜ் துறைமுகங்களுடனான இணைப்பை இது உறுதி செய்யும்.

இந்தப் பிரிவு தொடங்கப்படுவதன் மூலம், மேற்கு மற்றும் கிழக்கு சரக்குப் பாதைகள் இடையே தடையற்ற இணைப்பு ஏற்படும். முன்னதாக, கடந்த ஆண்டு டிசம்பர் 29ம்தேதி கிழக்கு சரக்கு ரயில் பாதையின் புதிய பாவ்பூர்புதிய குஜ்ரா பிரிவை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்தார்.

இரட்டை அடுக்கு பெட்டக ரெயிலை இயக்குவதன் மூலம் கூடுதலாக 25 டன் சுமையைக் கொண்டு செல்ல முடியும். இதனை டிஎப்சிசிஐஎல்லுக்காக ஆர்டிஎஸ்ஓவின் ரெயில் பெட்டி துறை வடிவமைத்தது. இதற்கான பிஎல்சிஎஸ்ஏ, பிஎல்சிஎஸ்பி மாதிரி ரெயில்களின் வெள்ளோட்டம் நிறைவடைந்தது. இந்த வடிவமைப்பு அதிக அளவிலான சுமையை, சீரான வகையில் ஏற்றிச் செல்லும் வகையில் அமைந்துள்ளது. இந்த இரட்டை அடுக்கு பெட்டக ரெயில், தற்போதைய இந்திய ரெயில்வே போக்குவரத்துடன் ஒப்பிடுகையில், நான்கு மடங்கு எண்ணிக்கையில் பெட்டகங்களை ஏற்றிச் செல்லும் திறன் படைத்தது.

100 கி.மீ வேகம்

டிஎப்சிசிஐஎல் அதிகபட்சமாக மணிக்கு 100 கி.மீ வேகத்தில் சரக்கு ரெயில்களை இயக்கும். தற்போது இந்திய ரெயில்வே பாதைகளில் அதிகபட்சம் மணிக்கு 75 கி.மீ வேகத்திலேயே சரக்கு ரெயில்கள் இயக்கப்படுகின்றன. மேலும் சராசரி சரக்கு ரயில்களின் வேகமும் மணிக்கு 26 கி.மீ என்ற அளவிலிருந்து பிரத்யேக சரக்குப் பாதையில் மணிக்கு 70 கி.மீ ஆக உயர்த்தப்படும்.

நடிகை சித்ரா தற்கொலை: கைது செய்யப்பட்ட கணவர் ஜாமீன் மனு தாக்கல்

சென்னை, ஜன. 7–

சின்னத்திரை நடிகை சித்ரா, கடந்த டிசம்பர் 9ம் தேதி தற்கொலை செய்து கொண்டார். இது தொடர்பாக, தற்கொலை என வழக்குப் பதிவு செய்த நசரத்பேட்டை காவல் ஆய்வாளர், பின், அவரது கணவர் மற்றும் உறவினர்களுடன் நடத்திய விசாரணைக்குப் பின், தற்கொலைக்குத் தூண்டியதாக வழக்குப்பதிவு செய்து, ஹேம்நாத்தை கைது செய்தனர். இந்த வழக்கில், டிசம்பர் 14ம் தேதி கைது செய்யப்பட்ட ஹேம்நாத், தனக்கு ஜாமீன் வழங்கக் கோரி சென்னை ஐகோர்டில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தொலைக்காட்சி தொடர்களில் நடிக்கக் கூடாது எனக் கூறி, சித்ரா மீது சந்தேகம் கொண்டதால் தான் அவர் தற்கொலை செய்து கொண்டதாக தனக்கு எதிராக காவல் துறையினர் கூறும் குற்றச்சாட்டு பொய்யானது என ஹேம்நாத் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆகஸ்ட் மாதம் தாங்கள் திருமணம் செய்து கொண்டதாகவும், தன்னுடனும், தனது குடும்பத்தினருடனும் சித்ரா அன்போடு பழகியதை அவரது தாய் விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார். தனக்கும், சித்ராவுக்கும் இடையில் எந்த கருத்து வேறுபாடும் இல்லை எனத் தெரிவித்துள்ள ஹேம்நாத், எந்த குற்றமும் செய்யாததால் தனக்கு ஜாமீன் வழங்க வேண்டும் என மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த மனு நீதிபதி பாரதிதாசன் முன் இன்று விசாரணைக்கு வந்தபோது, ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கை மத்திய குற்றப்பிரிவு விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளதால், பதிலளிக்க இரு வாரங்கள் அவகாசம் வழங்க வேண்டும் என காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜாமீன் வழங்க எதிர்ப்பு தெரிவித்து மனுத்தாக்கல் செய்ய உள்ளதாக சித்ராவின் பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, மத்திய குற்றப்பிரிவினரை எதிர்மனுதாரராக சேர்க்க மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்ட நீதிபதி, வழக்கு தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்ய காவல் துறைக்கும், ஜனவரி 18ம் தேதிக்குள் மனுவுக்கு பதிலளிக்கும்படி காவல் துறைக்கு உத்தரவிட்டார்.

டெல்லியில் விவசாயிகள் டிராக்டர் பேரணி

புதுடெல்லி, ஜன. 7–

மத்திய அரசின் வேளாண் சட்டங்களுக்கு எதிராக புதுடெல்லியில் விவசாயிகளின் டிராக்டர் பேரணி துவங்கியது.

மத்திய அரசு கொண்டு வந்த வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளுடன் மத்திய அரசு நாளை 8ம் கட்ட பேச்சுவார்த்தை நடத்துகிறது. இந்நிலையில், வேளாண் சட்டத்திற்கு எதிராக இன்று விவசாயிகள் டிராக்டர் பேரணியை முன்னெடுத்துள்ளனர். கிழக்கு, மேற்கு உள்பட புதுடெல்லியின் அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளிலும் விவசாயிகள் டிராக்டர் பேரணியில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகளின் பேரணியையொட்டி ஹரியானாவின் குண்லி, மானேசர், பல்வால் ஆகிய தேசிய நெடுஞ்சாலையின் சுங்கச்சாவடிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் டிராக்டர் பேரணி நடைபெறும் சாலைகளில் பாதுகாப்பிற்காக ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து டிராக்டர் பேரணியில் ஈடுபட்டுள்ள பாரதிய கிசான் சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் ராகேஷ் டிகத் கூறுகையில், ஜனவரி 26ம் தேதி குடியரசு தினவிழாவில் நடைபெறும் டிராக்டர் பேரணியின் முன்னோட்டமாக இந்த பேரணி நடைபெறுகிறது என்றார்.

நல்ல திட்டங்களை எதிர்ப்பதுதான் ஸ்டாலின் வேலை...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணா தி.மு.க ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் என்று சட்டமன்றத்திலே சூளுரைத்தார். தனக்குப்பின்னாலும் வாழையடி வாழையாக கழகம் நிலைத்து நின்று நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்ற லட்சிய வார்த்தையை சட்டமன்றத்தில் குறிப்பிட்டார். அம்மா இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், அவர் ஆற்றிய சேவை, பணி இன்னும் இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித்தலைவி அம்மா ஆகியோர் நாட்டு மக்களுக்காக சேவை செய்து வாழ்ந்து மறைந்தார்கள். அவர்கள் வழியில் செயல்படுகிறது அம்மாவின் அரசு.

ஈரோடு மாநகராட்சியில் நாங்கள் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றித் தந்துள்ளோம். ஏழை, எளிய மக்களுக்காக தமிழ்நாடு முழுவதும் 2000 அம்மா மினி கிளினிக் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் மட்டும் 6 அம்மா மினி கிளினிக் திறந்து வைத்துள்ளோம். இந்த சிறப்பான திட்டத்தை நாடே போற்றி வருகிறது. ஆனால் ஸ்டாலின் இத்திட்டத்தினை எதிர்த்து வருகிறார். இந்த திட்டத்தில் என்ன குறை கண்டீர்கள். அனைத்து நல்ல திட்டங்களையும் எதிர்ப்பதுதான் ஸ்டாலினின் வேலை.

சாதனைகள்

ஆதிதிராவிட பள்ளி மாணவர்களுக்காக போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை வழங்க எங்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து, 10ம் வகுப்பு படிக்கின்ற மாணவர்கள் முதல் உயர் கல்வி படிக்கின்ற மாணவர்கள் வரை ஆண்டொன்றுக்கு ரூ.1500 கோடி போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

ஈரோடு மாநகரத்தில் மட்டும் ஏழை மக்கள் குடியிருக்க 1850 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமில்லாமல், மாவட்டத்தில் வசிக்கும் பொதுமக்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக ரூ.62 கோடி மதிப்பீட்டில் அரசு பல்நோக்கு மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது.

அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அதன்படி ரூ.70 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டப்பட்டு விரைவில் முடிக்கப்படவுள்ளது. பாதாள சாக்கடை திட்டம் ரூ.250 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் 2 பாதாள சாக்கடை திட்டங்கள் ஒன்று ரூ.45 கோடியிலும், மற்றொன்று ரூ.65 கோடியிலும் நடைபெற்றுக் கொண்டிருகின்றன. ஈரோடு

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஈரோடு மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்தின் போது ஈரோடு மாவட்ட கழக அலுவலகத்தில் நிர்வாகிகள், இளம் பெண்கள் பாசறை மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவு சார்பு அமைப்புகளின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.

மாநகரத்தில் மழை அதிகமாக பெய்கின்ற போது மின்தடை ஏற்படக்கூடாது என்பதற்காக மாநகரப்பகுதிகளில் பூமிக்கடியில் மின் கம்பிகள் பதிக்கப்பட்டு உள்ளது. அதே போல் ஈரோடு பள்ளிபாளையத்திற்கு ஒரு பாலம் தான் இருந்த காரணத்தினால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அதனையும் சரிசெய்வதற்கு புதிய பாலத்தை அம்மாவின் அரசு கட்டிக் கொடுத்துள்ளது. பெரும்பள்ளம் ஓடை அழகுபடுத்த ரூ.200 கோடி நிதி ஒதுக்கியது அம்மாவின் அரசுதான். ரூ.52 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.485 கோடியில் குடிநீர் திட்டம்

அதைவிட முக்கியமானது இங்குள்ள ஈரோடு மக்கள் பாதுகாக்கப்பட்ட சுத்தமான குடிநீர் வழங்க வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை வைத்துக்கொண்டே இருந்தார்கள். மக்களின் கோரிக்கையினை ஏற்று ரூ.485 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி கோட்டையில் இருந்து நாள்தோறும் ஈரோடு மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்கப்படும். 98 சதவீத பணி முடிவடைந்து விட்டது. மீதமுள்ள 2 சதவீத பணி நிறைவு பெற்ற பின்னர் நானே வந்து குடிநீர் திட்டத்தை திறந்து வைப்பேன். இந்த திட்டத்தின் மூலமாக 90,000 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

ஈரோடு மாநகரத்தில் பாலம் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அக்கோரிக்கையினை ஏற்று 2017ம் ஆண்டு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டு, ஒப்பந்த காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே கட்டி முடிக்கப்பட்டு அரசு மருத்துவமனை அருகில் உள்ள இந்த பாலம் என்னால் திறக்கப்பட்டது.

அதேபோல் ஈரோடு காளிங்கராயன் அரசு விருந்தினர் மாளிகையில் இருந்து திண்டல் மலை வரை மிகப்பெரிய உயர்மட்ட பாலம் கட்டி கொடுக்கப்படும். போக்குவரத்து நெரிசலை குறைக்க திண்டல் மலை வரை புறவழிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஈரோடு முதல் பெருந்துறை வரை சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது. ஈரோடு மாநகர மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றிய அரசு அம்மாவின் அரசு. தி.மு.க. ஆட்சி காலத்தில் ஈரோடு மாநகர மக்களுக்கு எந்த வித திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை. வாக்காளர்களின் பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்றிய அரசு அம்மாவின் அரசு.

யார் தவறு செய்தாலும் நடவடிக்கை

சட்டம் ஒழுங்கு பேணி காப்பதில் முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. யார் தவறு செய்தாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அது கட்சியிலும் சரி, ஆட்சியிலும் சரி. ஆனால் தி.மு.க ஆட்சியில் அப்படி அல்ல. தவறு செய்தவர்களை காப்பாற்ற நினைப்பதுடன் சட்டத்துக்கு எதிராக நடப்பார்கள். ஆனால், புரட்சித்தலைவர் ஆட்சியிலும் சரி, அம்மாவின் ஆட்சியிலும் சரி, அம்மாவின் மறைவுக்குப் பிறகும் சரி சட்டத்தின் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சிறுபான்மை மக்களாக இருந்தாலும் சரி, பெரும்பான்மை மக்களாக இருந்தாலும் சரி இந்த மண்ணில் வாழும் அனைவருக்கும் இந்த அரசால் முழு பாதுகாப்பு வழங்கப்படும். ஜாதி சண்டையும் கிடையாது, மதச்சண்டையும் கிடையாது. தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழந்து கொண்டிருக்கிறது. கொரோனா காலக்கட்டத்தில் பொதுமக்கள் சிரமப்படக் கூடாது என்பதற்காக கடந்த 8 மாதங்களாக மக்களுக்கு விலையில்லா அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் போன்ற பொருட்களை கொடுத்த ஒரே அரசு, இந்தியாவிலேயே எங்களுடைய அரசு தான். தைப் பொங்கலை ஏழை எளிய மக்கள் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பதற்காக அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா 2500 ரூபாய் மற்றும் பொங்கல் தொகுப்பு வழங்கப்படுகிறது.

மகளிர் சுய உதவிக்குழுக்கள் தமிழகத்தில் அதிக அளவில் ஆரம்பிக்கப்பட்டு 1 கோடியே 7 லட்சம் உறுப்பினர்களை கொண்டு இயங்கி வருகிறது. இதன் மூலம் ரூ.80,000 கோடி வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் சாயப்பட்டறைகள் இயங்கி வருகின்றன. அதன் மூலம் வெளியேறுகின்ற கழிவு நீரை சுத்தப்படுத்துவதற்காக சுமார் 26 ஏக்கர் நிலப்பரப்பளவில் மத்திய அரசின் நிதி உதவியுடன் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும். நடந்தாய் வாழி காவேரி திட்டத்தின் கீழ் மேட்டூரில் இருந்து கடலில் கலக்கும் வரை எங்கெல்லாம் காவேரியில் அசுத்த நீர் கலக்கின்றதோ அங்கெல்லாம் சுத்திகரிப்பு செய்து நீர் விடப்படும். பிரதமரிடம் திட்டத்திற்கு நிதி ஒதுக்க கோரியிருந்தோம். கடந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரில் ஜனாதிபதி உரையில் நடந்தாய் வாழி காவேரி திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படும் என்ற செய்தி இடம்பெற்றிருந்தது.

அம்மாவின் ஆட்சி தொடர, கழகத்தின் சார்பில் இங்கே போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு இரட்டை இலை சின்னத்திலே வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்யுமாறு உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசினார்.

சீன ஆன்–லைன் கந்து வட்டி வழக்கு: அமலாக்கப்பிரிவு விசாரணை

சென்னை, ஜன. 7–

சீன ஆன்லைன் கந்து வட்டி விவகாரம் தொடர்பாக மத்திய அமலாக்கப்பிரிவு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சீன ஆன்–லைன் கந்து வட்டி செயலி தொடர்பான வழக்கு ஆவணங்களை மத்திய குற்ப்பிரிவு போலீசாரிடமிருந்து பெற்று அமலாக்கத் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். சட்டவிரோதமாக கந்துவட்டிச் செயலியை இயக்கி வந்த இரண்டு சீனர்கள் உள்ளிட்ட நால்வரை சென்னை மத்திய குற்றப்பிரிவு பெங்களூரில் கைது செய்து சென்னை கொண்டு வந்து சிறையில் அடைத்தனர். அதிக அளவிலான வட்டி விகிதத்தில் கடன் கொடுத்து, செலுத்தத் தவறியவர்களை அவமானப்படுத்தி மிரட்டியதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் 2 சீனர்களான ஜியோ யாமோ (வயது 38), ஊ யுவானுலம் (வயது 28) மற்றும் சீன செயலிக்கு சிம்கார்டுகள் விற்பனை செய்த வோடா போன் ஏஜென்சி நடத்திய மனோஜ்குமார், முத்துக்குமார் உள்பட மொத்தம் 8 பேரை கைது செய்துள்ளனர்.

இந்த மோசடி செயலி மூலமாக சட்டவிரோதமாக பண பரிவர்த்தனை நடைபெற்றது தொடர்பாகவும் மேலும் இந்த செயலிகள் மூலம் இந்திய பணம் சட்ட விரோதமாக வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டு இருக்கிறதா என்பது குறித்து விவரங்களை சென்னை மத்திய குற்றப்பிரிவு இடமிருந்து அமலாக்கத் துறையினர் பெற்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கோயமுத்தூர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.20/2020-21/தவஅ/நாள்:05.01.2021

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, கோவை வட்டம் அவர்களால், நிரந்தர வெள்ள சீரமைப்பு பணிகள் - 2020-21 திட்டம் பொள்ளாச்சி (நெ) க(ம)ப கோட்டம் மற்றும் உதகமண்டலம் (நெ) க(ம)ப கோட்டத்தைச் சார்ந்த மொத்தம் 4 பணிகளுக்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 25.01.2021, 15.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை 08.01.2021 இருந்து https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணைய தளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
க(ம)ப, கோயமுத்தூர் வட்டம்

செ.ம.தொ.இ/076/ஒப்பந்தப்புள்ளி/2021

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
Website: www.eihassociatedhotels.in
Phone: 91-44-22344747, Fax: 91-44-22346699

அறிவிப்பு

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 31 டிசம்பர், 2020ல் முடிந்த மூன்றாவது காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் வியாழக்கிழமை, 28 ஜனவரி 2021 அன்று கூட்டப்படுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணைய தளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்
கொல்கத்தா
7 ஜனவரி 2021

ஹரிதா சீட்டிங் சிஸ்டம்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம் : "ஜெயலெக்ஷ்மி எஸ்டேட்ஸ்", எண்.29, ஹாரீடோஸ் சாலை, சென்னை 600 006.
தொலைபேசி : 044 - 28272233, தொலைநகல் : 044 - 28257121
இணையதளம் : www.haritaseating.com
மின்னஞ்சல் : harita@haritaseating.com
CIN : L27209TN1996PLC035293

அறிவிப்பு

டிசம்பர் 31, 2020 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கையை (குறைந்தபட்ச ஆய்வுக்கு உட்பட்ட) பரிசீலித்து ஒப்புதல் வழங்க, கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டம் ஜனவரி 13, 2021 புதன்கிழமை அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஹரிதா சீட்டிங் சிஸ்டம்ஸ் லிமிடெட்டிற்காக
H. லக்ஷ்மணன்
தலைவர்
சென்னை
06.01.2021

SHRIRAM Mutual Fund
NURTURING TRUST. SHAPING DREAMS

ஸ்ரீராம் மியூச்சுவல் பண்ட்
மூகாம்பிகா காம்ப்ளக்ஸ், 3வது தளம், 4, லேடி தேசிகாச்சாரி ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004.
(முதலீட்டு மேலாளர்: ஸ்ரீராம் அசெட் மானேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்)
CIN: L65991MH1994PLC079874
பதிவு அலுவலகம்: 1006, 10வது மாடி, மெடோஸ், சாஹர் பிளாசா, அந்தேரி குர்லா சாலை, ஜெ.பி. நகர், அந்தேரி (கிழக்கு), மும்பை 400 059

அறிவிப்பு மற்றும் பிற்சேர்க்கை

ஸ்ரீராம் அசெட் மானேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டின் சுயாதீன இயக்குனரான திருமதி. சந்திரா ஐயங்கார் அவர்கள் ஜனவரி 01, 2021 முதல் நிறுவனத்தின் இயக்குநர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

எனவே, ஸ்ரீராம் மியூச்சுவல் பண்டின் கூடுதல் தகவல் அறிக்கையில் (SAI) ''அசெட் மானேஜ்மெண்ட் கம்பெனியின் இயக்குனர்கள் விவரங்களுக்கு'' தொடர்புடைய அட்டவணையில் கீழ்க்கண்ட பத்தியை நீக்க வேண்டும்.

பெயர்	வயது	கல்வித்தகுதி	சுருக்கமான அனுபவம்
திருமதி. சந்திரா ஐயங்கார் சுயாதீனம்	69 ஆண்டுகள்	ஐ.ஏ.எஸ் பயிற்சி, லால் பகதூர் சாஸ்திரி நேஷனல் அகாடமி ஆப் அட்மினிஸ்ட் ரேஷன் 1973–1975; மாஸ்டர் ஆப் ஆர்ட், டெல்லி பல்கலைக்கழகம் மிரான்டா ஹவுஸ் 1971–1973 பேஸ்லர் ஆப் ஆர்ட், சென்னை பல்கலைக்கழகம், எத்திராஜ் கல்லூரி 1968–1971	திருமதி சந்திரா ஐயங்கார் 1973ஆம் ஆண்டு இந்திய நிர்வாக சேவைகளின் (ஐஏஎஸ்) அதிகாரியாக உள்ளார். இவர் மகாராஷ்டிரா அரசாங்கம் மற்றும் இந்திய அரசில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, உயர் மற்றும் தொழில்நுட்ப கல்வி, ஊரக வளர்ச்சி மற்றும் பொது சுகாதாரம் போன்ற பல துறைகளுக்கு தலைமை தாங்கினார். மகாராஷ்டிரா அரசாங்கத்தின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு செயலாளராக இருந்தபோது இந்தியாவில் பெண்கள் அதிகாரம் பெறுவதற்கான முதல் மாநிலக் கொள்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு அவர் பொறுப்பேற்றார். 2010ல் ஓய்வு பெறுவதற்கு முன்பு, திருமதி ஐயங்கார் மகாராஷ்டிரா அரசாங்கத்தின் கூடுதல் தலைமை செயலாளராக இருந்தார். அவர் பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட் (BHEL) குழுவில் இயக்குநராகவும், மகாராஷ்டிரா எரிசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். அவர் தற்போது இந்தியா முழுவதும் அனாதை இல்லங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வரும் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமான மிராக்கிள் பவுண்டேஷனின் குழுவில் உள்ளார்.

ஸ்ரீராம் மியூச்சுவல் பண்டின் கூடுதல் தகவல் அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்த அறிவிப்பு மற்றும் பிற்சேர்க்கை உள்ளது.

அவ்வப்போது வழங்கப்பட்ட பிற்சேர்க்கையுடன் கூடுதல் தகவல் அறிக்கையின் இதர விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எந்தவித மாற்றமும் இல்லை.

ஸ்ரீராம் அசெட் மானேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக
(ஸ்ரீராம் மியூச்சுவல் பண்டின் முதலீட்டு மேலாளர்)
ஒப்பம்/–
ஒப்புதல் அதிகாரி

தேதி: ஜனவரி 06, 2021
இடம்: கொல்கத்தா

மேற்கொண்டு விவரங்களுக்கு ஸ்ரீராம் அசெட் மானேஜ்மேண்